# இரட்டைக் காப்பியங்களில் மணிமேகலை பற்றிய செய்திகளின் பின்புல அரசியல்

முனைவர் ஆ. சந்திரன்

# The Political Background Of The News About Manimegalai In The Dual Epics

Dr. A. Chandiran

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்

Assistant Professor, Department of Tamil PG & Research,
Sacred heart college (Autonomous), Tirupattur, Tirupattur District, Chandiranacn@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

கோவலன் மாதவிக்கு மகளாகப் பிறந்த மணிமேகலை பற்றிய செய்தியைச் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. என்றாலும், மணிமேகலை பற்றிய குறிப்புகளில் இரண்டு காப்பியங்களிலும் முரண்பாடுகள் பல இடம்பெற்றிருக்கின்றன. அவற்றை வாசிப்பில் மிகத்தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. மணிமேகலை பற்றிய குறிப்புகளில் காணப்படும் இந்த முரண்பாடுகள் குறித்தும் அவற்றிற்கான காரணங்கள் மற்றும் அவற்றின் பின்புலமுள்ள அரசியல் குறித்தும் ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

சிலப்பதிகாரத்தில் மணிமேகலை பற்றிய மாடலமறையோன் மற்றும் தேவந்தியின் பின்புலங்களில் இடம்பெற்றுள்ள குறிப்புகளும், மணிமேகலையில் மணிமேகலை பற்றிய சித்திராபதி, உதயகுமரன் நண்பனான எட்டி மற்றும் கதாசிரியர் கூற்றாக (சமூகத்தின் மன நிலை) வெளிப்படும் குறிப்புகளும் முரண்படுகின்றன. இந்த முரண்பாடுகளை எல்லாம் ஒப்பிட்டு ஆராய மணிமேகலை பற்றிய புதிய கருத்துக்களைப் பெற முடிகின்றன.

மணிமேகலைத் துறவும் சித்திராபதியின் எதிர்ப்பும், மணிமேகலை (கணிகை மகள் என்கிற பின்புலம்) பற்றிய சமூக நிலை, மணிமேகலை பழம்பிறவி அறிதலின் பின்புலம் மணிமேகலை துறவியாக மாறிய பின்புலம் (எதிர்பார்ப்பும் ஜ் எதிர்ப்புகளும்) போன்ற பின்புலங்களில் அறியப்படும் செய்திகள் வழி பெறப்படும் கருத்துகள் குறித்து விவாதிக்க வேண்டிள்ளது. அப்படிப் பார்க்க கண்ணகி மகள் துறவி ஙீ கணிகை மகள் துறவி என மணிமேகலையின் துறவின் பின்புலம் எதிரும் புதிருமாக மோதிக் கொண்டு இறுதியாக = கோவலன் மகள் துறவி என நிலைக் கொள்கிறது.

காப்பியத்தின் தொடக்கத்தில் கண்ணகியின் மகள் என்று சுதமதியிடம் சொல்லுவதாகத் தொடங்கி தொடர்ச்சியாக அவளுடைய செயல்பாடுகளின் வெளிப்பாடுகள் காரணமாகப் படிப்படியாக உயர்ந்து கோவலனின் மகள் என்ற சமூக அந்தஸ்தைப் பெற்றவளாகத் துறவியாக உச்சம் பெறுவதாகக் காப்பியத்தில் மணிமேகலையின் பயணம் தொடர்கிறது. அதாவது, பிறப்பு அடிப்படையிலான தகுதி பற்றிய சமூகப் பொதுபுத்தியின் வெளிப்பாட்டை இக்குறிப்புகள் வழி கவனிக்க முடிகிறது.

**தேடுசொற்கள்:** சிலப்பதிகாரம், மணிமேகலை, சமூக நிலை, சாத்தனார் மனநிலை, பௌத்த மதம், மணிமேகலைத் துறவு, பெண்ணியம்.

## Abstract

The story of Manimegalai, who was born as the daughter of Govalan Madhavi, is told in two Epics, Silapathikaram Manimegalai. However, there are many inconsistencies between the two Epics in the references to Manimegalai. They can be understood very clearly in reading. This article examines these contradictions in references to Manimegali, their causes and the politics behind them.

The references to Manimegalai in Silapathikaram in the background of Madalakarayon and Devanthi are contradicted by Chitrapathi, Udayakumaran's friend Etty and the narrator's statement (state of mind) about Manimegalai in Manimegalai. By comparing all these contradictions, we can get new ideas about Manimegalai.

This aims to discuss the perceptions about Manimegalai (background of Kanikai daughter) through social status, background knowledge of Manimegalai, background of Manimegalai becoming a saint (expectations and resistances) In that way, the background of Manimegalai asceticism as Kannagi's daughter ascetic X Kanigai's ascetic asceticism collides with each other and finally stands as Kovalan's daughter ascetic.

Manimegalai's journey in the epic continues with Manimegalai telling Sudhamathi that she is the daughter of Kannagi at the beginning of the epic, gradually rising due to revelations of her activities and culminating in the social status of Govalan's daughter as a saint. That is, these references can be seen as an expression of social common sense about birth-based merit.

### Keywords

*Chilapathikaram, Manimegalai, social status, satanic mentality, Buddhism, Manimegalai asceticism, feminism.*

### முன்னுரை

கோவலன் மாதவிக்கு மகளாகப் பிறந்த மணிமேகலை பற்றிய செய்தியைச் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. என்றாலும், மணிமேகலை பற்றிய குறிப்புகளில் இரண்டு காப்பியங்களிலும் முரண்பாடுகள் பல இடம்பெற்றிருப்பது வாசிப்பில் மிகத்தெளிவாகத் தெரிகின்றது. மணிமேகலை பற்றிய குறிப்புகளில் காணப்படும் முரண்பாடுகள் குறித்தும் அவற்றிற்கான காரணங்கள் மற்றும் அவற்றின் பின்புலமுள்ள அரசியல் குறித்தும் ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

### சிலப்பதிகாரத்தில் வெளிப்படும் மணிமேகலை பற்றிய குறிப்புகள்

மணிமேகலை பற்றிய குறிப்பைச் சிலப்பதிகாரத்தில் நாம் முதல் முறையாக மாடலமறையோனிடம் இருந்துதான் தெரிந்து கொள்கிறோம். தன்னுடைய மனைவியை அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கிச் செல்லும் கோவலனை வழியில் சந்திக்கும் அவன் கோவலனின் கடந்த கால வாழ்வின் வளம் நிறைந்த பகுதிகளை நினைவூட்டும் பின்னணியில் மணிமேகலை பற்றிய செய்தியைச் சொல்கிறான். "எம்குல தெய்வத்தின் பெயரை இவளுக்கு இடுங்கள் என நீ கூறினாய்! மேகலை அணிந்த ஆயிரம் கணிகையர் அக்குழந்தையை மணிமேகலை! எனக் கூறி வாழ்த்தினர். அன்று மங்கள மடந்தையான மாதவியுடன் நீயும் பொன்தானம் செய்தாய்" (சிலம்பு.15:35-40) என அது அமைந்துள்ளது. மாடலனுடைய அந்த முதல் உரையாடல் 15 ஆம் காதையில் இடம்பெற்றுள்ளது.

அதற்கு அடுத்ததாக, கண்ணகிக்குக் கோயில் சமைக்க இமயமலையில் இருந்து கல்கொண்டு வரச்சென்ற சேரன்செங்குட்டுவனை இமயமலையில் சந்தித்த பொழுது, 'மாதவியின் வரிப்பாடல் தொடங்கி, கோவலன் இறப்பு முதலானவற்றைக் கூறும் அவன் கோவலன் இறந்த செய்தியை அறிந்த தந்தை துறவியானது, தாய் இறந்தது, கண்ணகிக்கு நேர்ந்த துன்பங்களை எல்லாம் அறிந்த அவளது தந்தை துறவியானது, தாயார் உயிர் விட்டது இவற்றை எல்லாம் கேள்வியுற்ற மாதவி தாயார் சித்திராபதியிடம், "நல்ல அறவழியில் செல்ல நான் முடிவு செய்துவிட்டேன். எனவே நீயும் என் மகள்

மணிமேகலையைப் பெருந்துன்பத்துக்கு ஆளாக்கும் விலைமாதர் வாழ்க்கையில் ஈடுபடாது விடு" என்று கூறி மணிமேகலையின் சூடிய கூந்தலை நீக்கி அவளைப் போதி மாதவன் புகன்ற அறவாழ்வை மேற்கொள்ளச் செய்தாள்' (சிலம்பு.27:49-108) என மணிமேகலையின் துறவு பற்றிக் கூறுகின்றான். இவ்வாறு மாடலன் வழி மணிமேகலை பற்றி இரு விதமாக அறிய முடிகின்றது.

கண்ணகியின் தோழியான தேவந்தி சேரன் செங்குட்டுவனால் சமைக்கப்பட்ட கண்ணகியின் கோயிலைப் பார்த்துப் புலம்பும் இடத்திலும் மணிமேகலை பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. கண்ணகியின் சிலை முன்பு கோவலன் மற்றும் கண்ணகியின் பெற்றோர்களின் நிலைமை மற்றும் பாண்டியனின் மரணம் முதலானவற்றைப் பற்றித் தேவந்திக் கூறிப் புலம்பிக் கொண்டிருந்தபோது, 'கோவலன் இறந்ததும் அவன் மனைவியான நீ பட்ட துன்பமும் பிறர் கூறும் பழியும் கேள்விப்பட்டு வருந்தி போதி மர நிழலில் புண்ணிய தவச்சீலர் முன் தானம் பல செய்து மாதவி தன் மகளுடன் துறவு மேற்கொண்டாள்' (சிலம்பு.29:7) என அடித்தோழி கூறுவதாக இது இடம்பெற்றுள்ளது. அடுத்ததாக, கண்ணகி தெய்வமாகக் காட்சியளித்த பின்னர், (சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகி வானில் காட்சி அளித்த பிறகு இந்த உரையாடல் நிகழ்கிறது) 'மேலும் நீ வாய்விட்டு அரற்றிய மணிமேகலை யார்? அவள் துறவு மேற்கொள்ள காரணம் யாது? இங்கு அவற்றைக் கூறுக' எனச் சேரன் செங்குட்டுவன் வினவியதற்கு அவள் அளித்த பதிலுரையாக அது அமைவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

சேரன் செங்குட்டுவனை வாழ்த்தி முடித்த தேவந்தி, 'ஞ்அவளுக்கு ஆடல் பயிற்றுவிக்கும் தலைக்கோல் பட்டம் பெற்ற ஆசிரியன் அவளின் பின் உள்ளான். எனவே உயர் குலத்து மக்கள் அவளைச் சிறந்த கணிகையாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே மணிமேகலையை நீ என்ன செய்யப் போகிறாய்? உன் கருந்து யாது? என மாதவியிடம் சித்திராபதி கேட்க, இளமையும் அழகும் விளங்கும் மகளே வருக! என மணிமேகலையை மாதவி அருகில் அழைத்தாள். மணிமேகலையின் மாலைசூடிய கூந்தலைக் களைந்துபோக்கிப் புண்ணியத் தானங்கள் பல செய்து துறவி ஆக்கினாள்' (சிலம்பு.30:20-35) என்று மணிமேகலையின் துறவு நிகழ்ந்தது பற்றி விளக்கினாள். சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள மாடலமறையோன் மற்றும் தேவந்தியின் பின்புலங்களில் இடம் பெற்றுள்ள மணிமேகலை பற்றிய மேற்கண்ட குறிப்புகளில் இருந்து, குழந்தை மணிமேகலை கணிகையரின் வழ்த்துகளை மட்டுமே பெற்றாள் (கோவலன் பெரும் செல்வத்தை அந்தணர்களுக்கு வழங்கினான் என்றாலும்...)

கோவலன் இறந்தான் என்ற ஊர் அலர் காரணமாகவே மாதவி, மணிமேகலை துறவு நிகழ்ந்தது.
சித்திராபதியின் சம்மதத்துடன்தான் மணிமேகலையின் துறவு ஆரம்பமானது.
மணிமேகலை முறையாக நாட்டியம் பயிலவில்லை.
மணிமேகலையின் துறவை அறிந்த அரசனும் புகார் நகர குடிகளும் வருந்தினர்.
மணிமேகலையின் துறவை அறவண அடிகள் வழிதான் தேவந்தி அறிகிறாள். அதற்காக வருந்தவும் செய்கிறாள்.
என்ற செய்திகளை அறிந்துகொள்ளமுடிகின்றன.

இவற்றில், சித்திராபதியின் சம்மதத்துடன்தான் மணிமேகலையின் துறவு நடந்தது என்பதைத் தவிர பிற செய்திகளின் அடுத்தடுத்த தொடர்ச்சியையும் முரண்பாடுகளுடன் கூடிய புதிய செய்திகள் பலவற்றையும் மணிமேகலையில் பார்க்க முடிகின்றன. அவற்றைக் குறித்து இனிச் சுருக்கமாகக் காண்போம்.
மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள மணிமேகலை பற்றிய குறிப்புகள்.

மணிமேகலைக் காப்பியத்தில் தொடக்கம் முதல் இறுதி வரை மணிமேகலை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. என்றாலும், அச்செய்திகளைத் தொகுத்துப் பார்க்கும்போது, மணிமேகலைத் துறவும் சித்திராபதியின் எதிர்ப்பும், மணிமேகலை (கணிகை மகள் என்கிற பின்புல) பற்றிய சமூக நிலை, மணிமேகலை பழம்பிறவி அறிதலின் பின்புலம், மணிமேகலை துறவியாக மாறிய பின்புலம் (எதிர்பார்ப்பும் ஞ் எதிர்ப்புகளும்) என்கிற நான்கு விசயங்களின் பின்புலங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் கவனம் செலுத்த வேண்டியவைகளாக உள்ளன. அப்படிக் கவனம் செலுத்துவதன் மூலம் மணிமேகலையின் துறவு பற்றிய செய்திகளின் பின்னுள்ள அரசியலை நாம் அறிந்து கெள்ள முடியும்.
மணிமேகலைத் துறவும் சித்திராபதியின் எதிர்ப்பும்
மணிமேகலையில் தொடக்கத்திலேயே 'மாதவி துறவு பூண்டாள் என்ற செய்தி கேட்டு உள்ளம் அழிந்தாள் சித்திராபதி' (மணிமே.பதி.பா.வ.33-40) என்கிறார் சீத்தலைச் சாத்தனார். இது மணிமேகலை காப்பியத்தின் தொடக்கத்தில் உள்ள பதிகத்திலேயே கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் தேவந்தி மூலம் கூறப்பட்டுள்ளதற்கு இது நேர் எதிராக உள்ளது. மேலும், இத்தகைய முரணைக் காப்பியத்தில் தொடர்ந்து பல இடங்களில் பார்க்கமுடிகிறது.

ஊர் அலர் உரைத்த காதை. மணிமேகலையில் இடம் பெற்றுள்ள இரண்டாவது காதையின் தலைப்பே செய்தியைத் தெளிவாக உணர்த்துகிறது. என்றாலும், இது சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதற்கு மாறாக அதாவது, சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்டதால் உண்டான ஊர் அலராக இருக்க, மாதவி மணிமேகலையின் துறவுக்கான ஊர் அலராக மணிமேகலையில் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

இந்திர விழாவிற்கு நடனமாடாத மாதவியின் செயலுக்கு ஊராருடன் சித்திராபதியும் வருந்துகிறாள். துயரம் தாங்காமல் மாதவியின் தோழி வயந்த மாலையை மாதவியிடம் செல்லுமாறு தூதனுப்புகிறாள். 'நாடக மகளிர்க்கு என அமைந்த இலக்கணப்படி கற்ற ஆடல் பாடல்களை நிகழ்த்தாமல் துறவு பூண்டது நாணத்தக்கது. புகார் நகரிலுள்ளவர்களும் வேற்றுநாட்டவரும் பழிக்கும்படி உள்ளது' (மணிமே.2:1-47) என அவளது தூதின் செய்தி அமைந்துள்ளது. அந்தச் செய்தியைக் கேட்ட மாதவி, 'காதலன் கோவலன் இறந்த செய்தி அறிந்து இன்னும் இறக்காமல் இருக்கிறேன். புகார் நகர மக்களின் புகழ் மொழிகளை இழந்தேன். கணவனை இழந்த கற்புடைய பெண்களைவிட மேலான தெய்வத் தன்மைபெற்ற கண்ணகியின் மகளே மணிமேகலை. அவள் அறநெறி சேரவே தகுதி உடையவள். ஒரு போதும் இழிசெயல் புரியும் தீத்தொழிலையுடைய பரத்தையராக மாட்டாள்' (மணிமே.2:48-58) எனச் சித்திராபதியின் செய்தியைக் கொண்டுவந்த வயந்தமாலைக்குப் பதிலுரையாக அளிக்கிறாள். இந்தப் பதிலில் 'மணிமேகலையைக் கண்ணகி மகள்' என்று மாதவி கூறுவது கவனிக்கத்தக்கது.

மணிமேகலையின் துறவு குறித்து அறிந்த சித்திராபதி, 'மணிமேகலை மேற்கொண்ட துறவறத்தை ஒழித்து விடுவேன். கோவலன் கொலையுண்டதால் துயரடைந்த மாதவி அறவணப் பள்ளியைச் சேர்ந்தது ஊராரின் நகைப்பிற்கு உரியதாயிற்று. மணிமேகலை அறப்பணி செய்கிறாள். இது தகுதி உள்ள செயல் என்று கூறும் அறிஞர் உரை அவர்களுக்கு இகழ் உரையேஞ் மணிமேகலை கையில் ஏந்திய பிச்சைப் பாத்திரத்தைப் பறித்துப் பிச்சை ஏற்கும் பிறரிடம் கொடுப்பேன். உதயகுமரன் உதவியால் பொற்றேரின் மீது ஏற்றிக் கொண்டு வருவேன். அவ்வாறு வாரா விட்டால் செங்கற்களைத் தலையில் ஏற்றிச் சுமந்து அரங்கத்தைச் சுற்றி வந்து குடி குற்றத்தோடு வாழும் கணிகையரைப் போன்றவள் ஆவேன். அரங்கத்தில் ஆடும் பிற நாடக மகளிருடைய வீடுகளிலும் நுழையாத முறைமை உடையவள் ஆவேன்' (மணிமே.18:1-40) என்று வஞ்சினம் கூறுகிறாள்.

அவ்வாறு வஞ்சினம் கூறிச் செல்லும் அவள் உதயகுமரனைச் சந்திக்கிறாள். 'மணிமேகலையுடன் மாதவி கொண்ட தவக்கோலம் தீதின்றி உளதோ?' என்று கேட்கும் உதயகுமரனைப் பார்த்து, 'அவன் பொதுவெளியில் இருக்கிற காரணத்தினால் உதயகுமரன் - வண்டு மணிமேகலை - மலர் என நயமாகப் பேசி மணிமேகலையை உதயகுமரன் ஏற்கும்படி அவன் மனதில் சஞ்சலத்தை எற்படுத்துகிறாள்' (மணிமே.18:43-63). சித்திராபதியின் இந்த உரையைக் கேட்ட உதயகுமரன் பெருங்கடலில் மரக்கலம் உடையப் பெற்றவன் சிறந்த தெப்பத்தைப் பெற்றதைப் போன்று மகிழ்கிறான். அதை உணர்ந்த சித்திராபதி 'கணவனை அன்றிக் கடவுளையும் தொழாத குலமகளிர் தம் குடியில் மணிமேகலை பிறக்கவில்லை. ஆதலால் அவளுக்குக் காவலன் காப்பும் கற்பு நெறியும் கிடையாது. நாட்டு மக்கள் பலரும் காணும்வண்ணம் நல்ல அரங்குகளில் ஏறி ஆடலும் பாடலும் அழகும் காட்ட வேண்டும். மன்மதன் கரும்பு வில்லில் வண்டுகள் ஆகிய நாண் ஏற்றி அரும்புகளாகிய அம்பு விடுதல் போன்று போர் செய்யும் கயல் மீனை ஒத்த நீண்ட கண்களாகியஞ் (மணிமே.18:100-111) என்று வஞ்சக மொழி பல பேசுகிறாள். 'சித்ராபதியின் அந்த நீண்ட வஞ்சக உரையைக் கேட்ட உதயகுமரன் உள்ளம் பிறழ்கிறான்' (மணிமே.18:112). ஏற்கனவே, மணிமேகலை மீது இருந்த தன்னுடைய ஆசை என்னும் நெருப்பின் மீது சித்திராபதியின் நயமான அந்தப் பேச்சுக்கள் எண்ணெய் போல் விழ அவன் அவளை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்று வேகத்தைக் கூட்டுகிறான். அதன் விளைவாக விஞ்சையன் வாளால் வெட்டுண்டு கொல்லப்படுகிறான். மணிமேகலையை எப்படியாவது துறவில் இருந்து விடுவித்து ஆடல் பாடல்களை நிகழ்த்தும் கணிகையராக மீண்டும் மாற்றவேண்டும் என்ற சித்திராபதியின் ஆசை உதயகுமரனின் கொலைக்குக் காரணமான பிறகும் அவளது எண்ணம் மாறவில்லை.

உதயகுமரனின் இறப்பிற்குக் பின்னர் இராசமாதேவியைச் சந்திக்கும் அவள், 'இராசமாதேவி! இப்பெரும் நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வாழ்ந்து சிறப்பெய்திய நாடக கணிகையரில் என்னைப் போல் பெருந்துயரை யாரும் அடைந்ததில்லை. பூ மாலையை விலை கொடுத்து வாங்கிப் பரிசம் அளித்த கோவலன் இறந்தான் என்று வருந்தி மாதவி அறவணர் வாழும் தவப் பள்ளியில் சேர்ந்தாள். அவள் பெற்ற மணிமேகலை அரங்கத்தில் கூத்தாடும் இயல்பை உடையவளாக இருந்தும் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நகரெங்கும் திரிந்துகொண்டிருக்கிறாள். அந்த மணிமேகலையால்தான் உதயகுமரனுக்கு இடர் வந்தது. அவனுக்கு மட்டும் அன்று இந்த நகருக்கே பெருந்துன்பம் வந்தாலும் வரும். அது குறித்து நான் விரிவாக கூறுகிறேன், பீலிவளை உள்ளிட்ட....'(மணிமே.24:1-69) என்று சாதுரியமாக பேசி இராசமாதேவியிடம் இருந்து மணிமேகலையைத் திரும்ப அழைத்துச் செல்ல திட்டமிடுகிறாள். ஆனால், அவளது திட்டத்தை அறிந்த இராசமாதேவி 'உன்னுடைய கீழ்மையான பரத்தமைத் தொழில், பரத்தமை வாழ்வு அடைப்பட்ட வாழ்வு என்று உதறித்தள்ளி விட்டு அறநெறியில் புகுந்த மணிமேகலை உன்னுடன் வாராள். உன் வீட்டில் வந்து தங்கியிராள். என்னுடனே இருப்பாள்' (மணிமே.24:76-83) என்று மணிமேகலையை அவளுடன் அனுப்ப மறுக்கிறாள்.

இவ்வாறு மாதவி (வயந்தமாலை தூது), உதயகுமரன், இராசமாதேவி என்று தொடர்ந்து ஒவ்வொருவரிடமாகச் சென்று மணிமேகலையைக் கணிகையாக வாழவைப்பதே

தன்னுடைய ஒரே இலக்காகக் கொண்டு செயல்பட்டவளாகச் சித்திராபதி மணிமேகலை காப்பியத்தில் அடையாளம் காணப்படுகிறாள்.

**மணிமேகலை (கணிகை மகள் என்கிற பின்புலம்) பற்றிய சமூக நிலை**

மணிமேகலை கணிகையர் குலத்தில் பிறந்தவள். அவள் துறவியாக இருந்தாலும் கணிகையர் குலத்தின் பின்புலத்தில்தான் தொடர்ந்து சமூகத்தின் பார்வையில் பார்க்கப்பட்டுள்ளாள். இது குறித்த பதிவுகளை இனிக்காண்போம். 'உன் மகள் மணிமேகலை உவவனத்திற்கு அல்லாமல் வேறு வனம் செல்வதற்குத் தகுதியற்றவள்' (மணிமே.3:80-85) என்று மாதவிடம் கூறும் சுதமதி மணிமேகலையுடன் தானும் புறப்படுகிறாள். அவ்வாறு இருவரும் உவவனத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது அவர்களைப் பார்த்த 'மக்கள் விராடனின் நகரத்தில் அர்ஜுனனின் பேடி வடிவத்தை காண சூழ்ந்து ஆரவாரம் செய்த மக்களைப் போல சூழ்ந்து ஆரவாரம் செய்தனர். அன்னப் பறவைக்கு இவளைக் கண்டு நாணம் வரவில்லை. மயில் இவள் முன் செருக்கோடு நடந்து திரிந்தது. அன்னமும் மயிலும் கிளியும் இவளுக்கு நிகரானவை அல்ல என்று மக்கள் பலவாறு சொல்லி வருந்தினர்' (மணிமே.3:146-159) என்று மணிமைகலையின் துறவைக்கண்ட நகரமக்களின் மனநிலையாக - ஆசிரியர் கூற்றாகச் சொல்லப்பட்டுள்ளது.

எப்பொழுதும் பெண்களோடு இருக்கும் எட்டியைப் பார்த்து உதயகுமரன் ஏன் வருத்தத்தோடு இருக்கிறாய்? என்று கேட்டதற்கு, 'மாதவி பெற்ற மணிமேகலை தன்னுடைய அழகும் பொலிவும் இழந்து துறவுக்கோலத்தில் மலர் கொய்ய சென்ற மாதவியைக் கண்டபோது தனக்குக் கோவலனின் கொடுந்துயரம் நினைவுக்கு வந்தது அதுதான் என் சோகத்திற்குக் காரணம் '(மணிமே.4:51-70) என்று உதயகுமரனிடம் கூறுகிறான். இந்தப் பதிலைக் கேட்டதும் உதயகுமரன், 'எட்டிக்குமரா! வருந்தற்க மணிமேகலையின் வாட்டத்தைப் போக்கி என் மணித்தேரின் மீது ஏற்றி வருவேன்' (மணிமே.4:71-73) என்று களிப்போடு கூறிச்செல்கிறான். அவ்வாறு செல்லும் அவன் சுதமதியின் வரலாற்றைக் கேட்ட பின்னர், 'மணிமேகலையைச் சித்திராபதியின் உதவியாள் அடைவேன்' (மணிமே.5:79-83) என்று கூறிவிட்டுப் பூஞ்சோலையிலிருந்து காம நோயால் தளர்வுற்றவனாகச் செல்கிறான். உவவனத்தை விட்டுத் திரும்பிச் சென்ற அவனைப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலை 'பரத்தையர் குலத்திற்கு ஏற்றவாறு காவல் இல்லாதவள். பொருள் கொடுப்போருக்குத் தன்னை விற்கும் விலை மகள். என பலவாறு என்னை விரும்பியவன் பழித்துரைத்துச் சென்றான். ஆயினும் அந்த அயலான் பின்னே என் நெஞ்சம் சென்றது ஏன்? இதுதான் காமத்தின் இயல்பா அன்னையே? (மணிமே.5:84-94) என்று சுதமதியைப் பார்த்துக் கேட்கிறாள். அப்போது அங்கு வந்த மணிமேகலா தெய்வம் 'இது அறவோர் வாழும் மலர்வனம் ஆதலால் இங்கிருந்து உதயகுமரன் சென்றுவிட்டான். ஆனால் நீங்கள் இருவரும் இவ்வனத்தைக் கடந்து வெளியில் சென்றால் அங்குப் புறத்தே உள்ள ஒரு வீதியில் மணிமேகலையைக் கைப்பற்றுவான். ஆகவே பெரிய தெருக்கள் வழியாக செல்லாதீர்கள். இப்பெரிய சோலையைச் சூழ்ந்துள்ள வலிமையான மதுரையின் மேலைத்திசையில் உள்ள சிறு வாயில் வழியே செல்லுங்கள்' (மணிமே.6:18-27) என்று மணிமேகலை, சுதமதிக்கு அறிவுரை கூறுகிறது. அதன் பிறகு மணிமேகலையை மணிப்பல்லவ தீவில் இறக்கி விட்டுத் திரும்பும் மணிமேகலா தெய்வம் 'மன்னன் மகனே! அரசனுடைய செங்கோல் நிலை திரிந்தால் மழை பெய்யாது வளம் குறையும். ஆகவே தவநெறி சேர்ந்த மணிமேகலை மீது கொண்ட கேடுசெய்யும் தீய விருப்பத்தை ஒழிப்பாயாக' (மணிமே.7:11-14) என்று அறிவுரை வழங்குகிறது. சென்ற பிறவியில் மணிமேகலையின் கணவனாக இருந்தவன்தான் இந்த உதயகுமரன் என்று மணிமேகலைக்கு இந்த மணிமேகலா தெய்வம்தான் கூறியது (மணிமே.10:40-49) என்பது இங்குக் இணைத்து நோக்கத்தக்கது.

இந்தப் பின்புலங்களில்தான் புத்தபீடிகையைத் தொழுது அச்சயப்பாத்திரத்தைப் பெறுகிறாள் ம?ணிமேகலை. அப்படிப் பெற்ற பாத்திரத்தைக் கொண்டு உணவளிக்க விரும்பிய போது (ஆபுத்திரன் போல் அன்றி) 'ஆதிரை என்ற பத்தினிப் பெண்ணிடம் இருந்து முதலில் உணவினைப் பெறுவதே தகுதியுடையதாக இருக்கும்' (மணிமே.15:71-80) என்று வழிகாட்டுகிறாள் காயசண்டிகை என்ற வித்தியாதரப் பெண். பின்னர் அவ்வாறு பெற்ற உணவைக் கொண்டு உணவளிக்கும் வேலையை மணிமேகலை தொடங்கிய போது முதலில் அவ்வுணவைப் பெற்று உண்டு தன்னுடைய பசிப் பிணியையும் போக்கிக் கொள்கிறாள். பாத்திரத்தில் உணவளித்த ஆதிரையின் கணவனான சாதுவன் ஒழுக்கம் பற்றிய கதையும் (பரத்தையிடம் சென்று பெரும்பொருளை இழந்தவன். செல்வம் இழந்த இவனை பொருள் இல்லாதவன் என்று கணிகையர் கேலி செய்து அவமானப்படுத்தினர். முதலான..) தான் இழந்த செல்வத்தைப் பெற கடல் வணிகம் செய்ய சென்றவன் மரக்கலத்தில் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டு துயருற்றுக் கணவன் சென்ற இடத்திற்குத் தானும் செல்வேன் என்று தீயில் புகுந்தவளை தீ எரிக்கவில்லை. கூந்தலில் சூடி இருந்த மாலை வாடவில்லை...' (மணிமே16:1-70) என்ற ஆதிரையின் கற்பின் பின்புலமும், காயசண்டிகையின் பின்புலமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

அதற்கடுத்து உதயகுமரன் விஞ்சையனால்

வெட்டிக்கொல்லப்பட்ட செய்தியை மணிமேகலையிடம் கேட்டு அறிந்துகொள்ளும் அருந்தவமுனிவர்கள் மன்னனிடம் சென்று அவனது மரணச் செய்தியைக் கூறுகிறார்கள். மன்னன் கிள்ளிவளவனிடம் அவர்கள் கூறும் செய்தி, 'முன்பொருநாள் பரசுராமனால் காந்த மன்னுக்கு ஆபத்து வரும் என்பதை அறிந்த சம்பாபதி தெய்வம், காந்த மன்னிடம் சென்று பரசுராமனால் உனக்கு ஆபத்து நேரலாம். சிறிது காலம் புகருக்கு வெளியில் தங்கி இரு என்று கூற, நாட்டை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி எழ காந்த மன்னுக்கும் காமகிழத்திக்கும் பிறந்த ககந்தனை சில காலம் அரசனாக்கலாம் என்ற ஆலோசனையும் வழங்குகிறது. அவனுக்கு (ககந்தன்) அரசாலும் உரிமை இல்லை என்றாலும், பரசுராமன் கணிகையர் மகனைக் கொள்ளமாட்டான் என்ற காரணத்தால் அப்பதவியில் அமரவைக்கிறான் காந்த மன்னன். காந்த மன்னின் சார்பாக நாட்டை ஆண்டுவந்த ககந்தன் மருதி (பார்ப்பன பெண்) மற்றும் விசாகை என்ற இரு பெண்களின் கற்பொழுக்கம் கெட காரணமாக இருந்த தன் இரு மகன்களையும் தன் வாளால் வெட்டிக்கொன்று கற்பு நெறியைக் கத்தான். அத்தகைய காமுக்கச் செயலைச் செய்த உன்னுடைய மகன் விஞ்சயனால் கொள்ளப்பட்டான். இதில் கணிகை மகளான துறவு கோலம் பூண்ட இந்த மணிமேகலையின் குற்றம் ஏதுமில்லாதவள். துறவு பூண்ட கணிகை மகளான மணிமைகலையைக் தாங்கள் காக்கவேண்டும்' (மணிமே.22:25-215) என அமைந்துள்ளது.

உதயகுமரன் மரணித்த செய்தியை மன்னனுக்குக் கூறச் சென்ற அருந்தவமுனிவர்கள் கூறும் கதையின் பின்புலத்தையும் மேற்கண்ட செய்திகளுடன் இணைத்துப் பர்க்க வேண்டி உள்ளது. அப்படிப் பார்க்க துறவுக்கோலம் பூண்டாலும், மாதவியைத் (கண்ணகி மகள் எனக் கூறுதல்) தவிர சுதமதி, ஊர் மக்கள் (ஆசிரியர் கூற்று), எட்டி, உதயகுமரன், மணிமேகலாதெய்வம், அருந்தவமுனிவர்கள் என அனைவரும் அவளைக் (மணிமேகலை) கணிகையாகவே பார்த்துள்ளனர் எனத் தெளிவாக அறியமுடிகிறது.

**மணிமேகலை பழம்பிறவி அறிதலின் பின்புலம்**

இந்தப் பின்புலத்தில் நாம் மணிமேகலையின் பழம்பிறவி குறித்து அறிதல் மற்றும் அந்தச் செய்தியின் பின்புலத்தில் உள்ள அரசியல் குறித்தும் அறிவது அவசியமாகிறது. 'சென்ற பிறவியில் இராகுலனின் மனைவியான இலக்குமிதான் தான் என்றும் தாரை, வீரை என்ற பெயரில் இருந்த தன்னுடைய தமக்கையர்கள்தான் இப்பிறவியில் உள்ள தன்னுடைய தாயான மாதவியும் சுதமதியும் என்ற உண்மையைப் புத்தபீடிகையை வணங்கியபொழுது மணிமேகலை அறிந்து கொள்கிறாள்' (மணிமே.9:1-62). அவ்வாறு தன்னுடைய பழம்பிறவி குறித்து அறிந்துகொள்ளும் அவள் மணிமேகலா தெய்வத்திடம், 'உதயகுமரன்தான் தன்னுடைய இராகுலன்' (மணிமே.10:40-49) என்பதைக் கேட்டு அறிந்துகொள்கிறாள். அதைத்தொடர்ந்து, 'போன பிறவியில் இராகுலன் மனைவி இலக்குமி. இந்தப் பிறவியில் கணிகையர் மாதவி மகள் மணிமேகலை என்று தீவத்திலகையிடம் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள் (மணிமே.11:10-15) அதன் பின்னர், 'இரவிவர்மன் மகளே! துச்சயனின் துணைவி எனக்கு தமக்கையான தாரை, வீரை நீங்கள்தான். இப்பிறவியில் தாயார் ஆனீர்' (மணிமே.11:132-137) என்று தன்னுடைய தாய் மாதவி மற்றும் சுதமதியிடம் கூறும் அவள் 'அரவண அடிகளிடம் உதயகுமரன், சுதமதி, மாதவி மற்றும் தன்னுடைய பழம்பிறவி குறித்து மீண்டும் கேட்டு அறிந்து கொள்கிறாள். மணிமேகலை தன்னுடைய பழம்பிறவி பற்றிப் புத்த பீடிகையில் அறிந்து கொண்டாலும், அதன் பின்னர் மணிமேகலா தெய்வத்திடமும் கேட்டுத் தெரிந்து கொண்டது உள்ளிட்ட பிற செய்திகளுக்குப் பிறகு இந்தத் தகவல் அறவண அடிகளிடம் மாதவியால் மீண்டும் கேட்டு அறிந்து கொள்ளப்படுவதாக கூறப்பட்டுள்ளது (மணிமே.12 :8-30) கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு பழம்பிறவி பற்றிய செய்தி மீண்டு மீண்டும் சொல்லப்படுவது என்பது அச்செய்தியின் அவசியத்தை உணர்த்துகிறது. அதாவது ஒருபுறம் துறவியாக இருந்தாலும் அவள் கணிகையின் மகள் என்பதும் ஜ் மறுபுறம் முன் பிறவியில் மன்னனின் மனைவி என்பதும் தொடர்ந்து மாறிமாறி எதிரெதிராகக் கப்பியத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது என்பது அவற்றின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்துகிறது.

**மணிமேகலை துறவியாக மாறிய பின்புலம் (எதிர்பார்ப்பும் ஜ் எதிர்ப்புகளும்)**

கோவலன் இறந்த பின்னர் மாதவி தன்னுடைய மகள் மணிலேகலையைத் துறவு மேற்கொள்ள வைக்கிறாள். அப்போது 'மணிமேகலையைக் கண்ணகி மகள்' என்று கூறுகிறாள். இது காப்பியத்தின் தொடக்கத்திலேயே கூறப்பட்டுள்ளது. இதை மாதவி வயந்த மாலையிடம் கூறுவது (மணிமே.2:48-58) மற்றும் மணிமேகலை தனக்குள்ளாக நினைத்துக் கொள்வதாக (மணிமே.3:1-10), (மணிமே.3:18-20) உள்ள குறிப்புகள் மூலம் நன்றாக அறிந்துகொள்ள முடிகிறது.

என்றாலும், சமூக கட்டமைப்பை மீறி அவர்களின் எண்ணம் நிறைவேற பல படிநிலைகளைக் கடக்க வேண்டி இருந்தன. அதை, மணிமேகலை மாதவியின் மகள் என்ற பின்புலத்தில் அறியப்படுபவளாக சுதமதி - மாதவி உரையாடல்களின் மூலமாகவும் (மணிமே.3:80-82), (மணிமே.7:130-33), எட்டிகுமரன் - உதயகுமரனிடம்

கூறுவதாகவும் (மணிமே.4:60-70), கதாசிரியர் கூற்றாகவும் (மணிமே.15:71-74), சித்திராபதி கூற்றாகவும் (மணிமே.18:1-40), அருந்தவமுனிவர்களின் கூற்றாகவும் (மணிமே.22:214) காப்பியத்தில் தொடக்கம் முதல் பரவலாக 'மாதவியின் வழி பிறந்த கணிகையர் மகள்' என்ற பின்புலத்தில் சொல்லப்பட்டுவருவதும் மறுபுறம் மணிமேகலை தன் பழம்பிறவி அறிதல், அட்சயப் பாத்திரம் பெறுதல் என்ற நிகழ்வுகளின் தொடர்ச்சியாகத் தேவர் உலகில் இருந்து திரும்பிவந்த கண்ணகி மணிமேகலையிடம் பேசும் இடத்தில் 'மணிமேகலை கோவலன் மகள்' (மணிமே.26:1-9), (மணிமே.26:54-55) என்ற பின்புலத்தில் கூறப்படுவதும், கோவலன் இறந்த துயரம் தாங்காமல் தன் செலவத்தை எல்லாம் தானம் செய்துவிட்டுத் துறவியாக மாறிய மாசாத்துவான் மணிமேகலையைச் சந்தித்த பொழுது 'கோவலனின் மகள் மணிமேகலை' (மணிமே.28:93-97), (மணிமே.28:123-124) என்ற பின்புலத்தில் பேசுவதாகவும், அதைத் தொடர்ந்து கஞ்சகன் என்பவன் இளங்கிள்ளியிடம் மணிமேகலையை அறிமுகம் செய்து வைத்தபொழுது 'கோவலன் மகள்' (மணிமே.28:177-183) என்று அறிமுகம் செய்துவைப்பதாகவும் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு கூறப்பட்டுள்ளவற்றில் இருந்து நாம் பின்வரும் செய்திகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

மணிமேகலை பௌத்த துறவியாக இருக்கிறாள்.
அவள் அட்சயப் பாத்திரத்தைப் பெற்றவளாக இருக்கிறாள்.
பழம்பிறவியைக் குறித்து அறிகிறாள். (அப்பிறவியில் மன்னனின் மனைவியாக இருக்கிறாள்.)
தன் கணவன் கோவலனுடன் தேவ உலகம் சென்ற கண்ணகி சினத்தின் மூலம் செய்த செயல்கள் காரணமாக மீண்டும் பூமிக்கு வருகிறாள்.
அவ்வாறு வரும் கண்ணகி மணிமேகலையிடம் சமயக் கணக்கர்களைச் சந்தித்து உண்மைப் பொருளை அறிதல் வேண்டும் என்று சொல்கிறாள்.
ஐந்து சமயங்களிலும் உள்ள கருத்துக்களையும் அவற்றில் உண்மையான சமயம் எது என்பதையும் மணிமேகலை உணர்ந்து கொள்கிறாள்.
இந்த நிகழ்வுகள் எல்லாம் நடந்த பிறகுதான் கோவலன் மகள் மணிமேகலை என்ற நிலையை அடைகிறாள்.
எனக் காப்பியத்தில் மணிமேகலையின் பின்புலம் வெளிப்படுவது காணமுடிகிறது.

இந்தப் பின்னணியில் கோவலன் கண்ணகியின் கதை பற்றி அறிந்தவர்கள் குறித்து சிந்திக்கவேண்டியுள்ளது. கோவலன் கண்ணகியின் கதையை அறிந்தவர்கள் குன்றக்குரவர்கள், சீத்தலைச்சாத்தனார், இளங்கோவடிகள் என்பது நமறிந்த ஒன்று. இது பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றபோது குன்றக்குரவர்கள் கண்ணகி என்ற பத்தினித் தெய்வம் பற்றியும் அவள் தன் கணவனான கோவலனுடன் வானுலகம் சென்றது (சிலம்பு.25:55-60) பற்றியும் கூற அதைக் கேட்டுச் சேரன் செங்குட்டுவன் ஆச்சரியம் அடைகிறான். கண்ணகியின் வரலாற்றை அவனுடன் சென்ற சீத்தலைச் சாத்தனார் வழி அறிகிறான். அதாவது, கோவலன் கண்ணகி மாதவி கதையைச் சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள் உள்ளிட்டவர்களிடம் கூறியவர் சீத்தலைச் சாத்தனார் என்பதாக சிலப்பதிகாரத்தில் (சிலம்பு.25:66-80) சொல்லப்பட்டுள்ளது. கண்ணகியின் வரலாற்றைக் கேட்ட சேரன்செங்குட்டுவன் பத்தினித் தெய்வமான கண்ணகிக்குக் கோவில் கட்ட இளங்கோவடிகள் அத்தெய்வத்தின் வரலாற்றைக் காப்பியமாக வடித்தார். இவ்வாறு கண்ணகியின் வரலாறு அறிந்தவர்களாக குன்றக்குறவர், சீத்தலைச்சாத்தனார், இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் இருந்தனர் என்று இருந்தாலும், மணிமேகலை குறித்து சேரன் செங்குட்டுவன் தேவந்திய?டம் கேட்டுத் தெரிந்துகொள்கிறான் (சிலம்பு.30:1-5) என்று சிலம்பில் சொல்லப்படுவதும், மணிமேகலை பற்றிக் கூறும் தேவந்தி அச்செய்தியை அரவண அடிகளின் மூலம் அறிந்து கொண்டாதாகச் சொல்வதுடன், மணிமேகலை காப்பியத்தில் கூறப்படுவதற்கு மாறாக சித்திராபதியின் சம்மதத்துடன்தான் மணிமேகலையின் துறவு நிகழ்ந்தது என்ற முரணாக அமைந்துள்ளதையும் இணைத்துப் பார்க்கவேண்டி உள்ளது.

## முடிவுரை

அவ்வாறு பார்க்கும் போது பின்வரும் முடிவுகளைப் பெறமுடிகிறது.

கண்ணகி மகள் துறவி ஙீ கணிகை மகள் துறவி என மணிமேகலையின் துறவின் பின்புலம் எதிரும் புதிருமாக மோதிக் கொண்டு இறுதியாக = கோவலன் மகள் துறவி என நிலைக் கொள்கிறது.

காப்பியத்தின் தொடக்கத்தில் கண்ணகி மகள் என்று மணிமேகலை சுதமதியிடம் சொல்லுவதாகத் தொடங்கி தொடர்ச்சியாக அவளுடைய செயல்பாடுகளின் வெளிப்பாடுகள் காரணமாகப் படிப்படியாக உயர்ந்து கோவலனின் மகள் என்ற சமூக அந்தஸ்தைப் பெற்றவளாகத் துறவியாக உச்சம் பெறுவதாகக் காப்பியத்தில் மணிமேகலையின் பயணம் தொடர்கிறது. என்றாலும், பிறப்பு அடிப்படையிலான தகுதி பற்றிய சமூகப் பொதுபுத்தியின் வெளிப்பாடும் இடம்பெற்றுள்ளதை நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

அதாவது, ஒருபுறம் துறவியாக இருந்தாலும் அவள் கணிகையின் மகள் என்பதும் ஜ் மறுபுறம் முன் பிறவியில் மன்னனின் மனைவி என்ற செய்தி திரும்ப திரும்ப தொடர்ந்து மாறிமாறி காப்பியத்தில்

சொல்லப்பட்டுள்ளதையும் கவனிக்க இது புலப்படுகிறது. எல்லாம் சமயங்களிலும் பெண்கள் இரண்டாம் குடிகளாக தான் நடத்தப்படுகிறார்கள் பௌத்தம்தான் பெண்களுக்கான உரிமையை அவர்களுக்கான சுதந்திரத்தை தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்ற கருத்தை பெறமுடிகிறது. என்றாலும், அதை அடைவது அவ்வளவு சுலபமல்லை என்பதே அக்கால சமூகத்தின் வெளிப்பாடாக இருந்தது என்பதைச் சீத்தலைச் சாத்தனார் காப்பியத்தின் முழுமைக்கும் பரவலாகச் சொல்லிச் செல்வதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

----

**துணைநின்ற நூல்கள்**


இளவழுதி.வீ., சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்), 2015 (முதல் பதிப்பு), தி.நகர், சென்னை - 600 017.

இறைக்குருவனார், திருக்குறள் மணி புலவர்., சிலம்பில் பிழையா (ம. பொ. சி. க்கு மறுப்பு), 1983 (மறுபதிப்பு - 1) தமிழ் கொடி பதிப்பகம் , 88 தம்பு செட்டி தெரு, சென்னை - 600 001.

சிதம்பரனார், சாமி., சிலப்பதிகாரத் தமிழகம், 2008 (முதல் பதிப்பு), அறிவுப் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 600 014.

சிதம்பரனார். சாமி., மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, 2018, கௌரா பதிப்பகம் 6 /16 தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

சீனிச்சாமி. து., தமிழ் காப்பிய கொள்கை, 1985 (முதல் பதிப்பு) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010.

சுப்பிரமணியன், முனைவர் ச.வே., கானல் வரி, 2002 (முதல் பதிப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

தண்டபாணி.துரை (உ.ஆ)., மணிமேகலை (தெளிவுரை), 2019 (எட்டாம் பதிப்பு), உமா பதிப்பகம், சென்னை - 600 001.

துரைச்சாமிபிள்ளை. ஔவை சு., முப்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை ஆராய்ச்சி, டிசம்பர் - 1942, கழக வெளியீடு, சென்னை - 600 018.

நடராசன், தி.சு., சிலப்பதிகாரம் மறுவாசிப்பு, 2015 (முதல் பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை - 600 098.

பஞ்சாங்கம், க., இலக்கியத் திறனாய்வு (பஞ்சாங்கம் கட்டுரைகள் மிமி), 2010 (முதல் பதிப்பு), காவ்யா வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

மாணிக்கம்.ஞ (உ.ஆ)., சிலப்பதிகாரம் தெளிவுரை, 2019 (பத்தாம் பதிப்பு), உமா பதிப்பகம், சென்னை - 600 001.

மாணிக்கம். வ.சுப., இரட்டைக் காப்பியங்கள், 1958 (முதல் பதிப்பு) செல்வி பதிப்பகம், காரைக்குடி- 630 001.

மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் தெ.பொ.மீ களஞ்சியம் - 4, 2005 (முதல் பதிப்பு), காவ்யா வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

வேங்கடசாமி. மயிலை சீனி., பௌத்தமும் தமிழும், டிசம்பர் - 1942, கழக வெளியீடு, சென்னை - 600 018.


**ஆய்வுக் கட்டுரைகள்**


தேவந்தி - மடலமறையோன் பயணங்களில் உள்ள முரண்களும் அவற்றின் பின்னணியும், மார்ச் - 2023, புதிய?வையம், (UGC Approved journal) pa: 253 - 261, ISSN : 2456-821X <http://www.shcpub.edu.in/shc/publish_paper/?name=Puthiya+Avaiyam>

சிலப்பதிகார வாசிப்பில் உள்ள முரண்பாடுகளும் இடைவெளிகளும், ஜூலை - 2021, Shanlax International Journal of Tamil Research Volume: 6 Issue:1 P-ISSN: 2454- 3993 http://www.shanlaxjournals.in/journals/index.php/tamil/article/view/4035

மணிமேகலை கட்டமைக்கும் சமூக அரசியல் ... IJCRT.org <https://www.google.com/url?sa=t&source=web&rct=j&opi=89978449&url=https://ijcrt.org/papers/IJCRT2006532.pdf&ved=2ahUKEwipwtqrhOuAAxW1SmwGHa-LCj0QFnoECFAQAQ&usg=AOvVaw06AtxuzsfgsAEfdDvf2J0z>

மணிமேகலைக் காப்பியத்தில் புத்தசமய நெறி - ResearchGate <https://www.google.com/url?sa=t&source=web&rct=j&opi=89978449&url=https://www.researchgate.net/publication/341912337_The_Buddhism_Morality_in_The_Epic_Manimekalai/fulltext/5ee08d5d299bf1d20bdec527/The-Buddhism-Morality-in-The-Epic-Manimekalai.pdf&ved=2ahUKEwipwtqrhOuAAxW1SmwGHa-LCj0QFnoECDUQAQ&usg=AOvVaw3_hI_PwaIN2EiQQ9fMgj13>

பௌத்த சமயமும் மணிமேகலை மொழிபெயர்ப்புகளும் <https://www.google.com/url?sa=t&source=web&rct=j&opi=89978449&url=https://www.cict.in/pdf/workshop%2520proposal%2520on%2520Buddhism%2520and%2520M animegali%2520Translations.pdf&ved=2ahUKEwipwtqrhOuAAxW1SmwGHa-LCj0QFnoECDgQAQ&usg=AOvVaw1qR0agE0xtFMS3-3Y80XXc>


..................................